பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
28 03 2025 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- பிரதமர் திரு. நரேந்திர மோடி அடுத்த மாதம் முதல் வாரத்தில் தாய்லாந்து மற்றும் இலங்கை செல்கிறார்.
- வக்ஃப் சொத்துக்களை முறையாக நிர்வகிக்கவும், முறைகேடுகளை தடுக்கவும் வக்ஃப் சட்டத்திருத்த மசோதா அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.
- விண்வெளியில் விண்கலங்களை ஒன்றிணைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக **Rolling** பரிசோதனை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாக இஸ்ரோ தலைவர் திரு வி நாராயணன் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் அமைதியை குலைப்பதற்கு சிலர் முயற்சிப்பதாகவும், அதற்கு எதிர்க்கட்சியான அஇஅதிமுக துணைப்போவதாகவும் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- சென்னை சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் தியா சிட்டேல் - மனுஷ் ஷா இணை அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

**BIMSTEC** உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி அடுத்த மாதம் மூன்றாம் தேதி தாய்லாந்து செல்கிறார்.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தாய்லாந்து பிரதமரின் அழைப்பின் பேரில் அந்நாட்டு தலைநகர் பாங்காக் செல்லும் திரு நரேந்திரமோடி, பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

தாய்லாந்தில் நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு நான்காம் தேதி இலங்கை செல்லும் பிரதமர், அனுராதபுரத்தில் இந்தியாவின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

இந்த பயணத்தின்போது பிரதமர் இலங்கை அதிபர் திரு அனுர குமார திசநாயகே-வை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இலங்கை அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்து திரு நரேந்திரமோடி பேச இருப்பதாக வெளியுறவு அமைச்சக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

வக்ஃப் சொத்துக்களை முறையாக நிர்வகிக்கவும், முறைகேடுகளை தடுக்கவும் வக்ஃப் சட்டத்திருத்த மசோதா அவசியம் என்று மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

பத்திரிகை செய்தி ஒன்றை சுட்டிக்காட்டி அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், நாட்டை பிளவுபடுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் தவறான பிரச்சாரங்களை நிறுத்த வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

நிலக்கரி சுரங்க ஏலம் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் இதுவரை சுமார் நான்கு லட்சத்திற்கும் கூடுதலாக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருப்பதாக நிலக்கரி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுவரை நடத்தப்பட்ட 11 சுற்று நிலக்கரி சுரங்க ஏலம் வாயிலாக நாட்டில் 40 ஆயிரத்து தொள்ளாயிரம் கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் வரப்பெற்றுள்ளதாகவும், அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

உள்நாட்டு நிலக்கரி உற்பத்தியை அதிகரிக்கவும், நாட்டில் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நடத்தப்பட்டுள்ள 12-வது சுற்று ஏலம் நிலக்கரி தேவைக்காக வெளிநாடுகளை சார்ந்திருக்கும் நிலையை தவிர்ப்பதுடன், அந்நிய செலாவணி சேமிப்புக்கும் உதவிடும் என்றும் அமைச்சகம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

விண்வெளியில் விண்கலங்களை ஒன்றிணைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக **Rolling** பரிசோதனையை இஸ்ரோ வெற்றிகரமாக மேற்கொண்டிருப்பதாக அதன் தலைவர் திரு வி நாராயணன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து எமது செய்தியாளரிடம் பேசிய அவர், பல்வேறு சூழல்களிலும் விண்கலன்களை ஒன்றிணைப்பதற்கு குறிப்பாக சந்திரயான்-நான்கு விண்கலத்தை அனுப்புவதற்கு இதுபோன்ற சோதனைகள் அவசியம் என்று கூறினார்.

இந்த சோதனைகளின் மூலம் பெறப்படும் தரவுகள் இஸ்ரோ தனது தரைக்கட்டுப்பாட்டு மையத்தில் பல்வேறு மென்பொருட்களை பயன்படுத்த உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுபோன்ற மேலும் பல சோதனைகளை இஸ்ரோ தொடர்ந்து மேற்கொள்ள இருப்பதாகவும் திரு நாராயணன் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மேவார் மன்னர் ராணாசங்காவுக்கு எதிராக சமாஜ்வாதி உறுப்பினர் திரு ராம்ஜிலால் சுமன் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து உறுப்பினர்கள் எழுப்பிய அமளி காரணமாக மாநிலங்களவை நண்பகல் 12 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

இன்று காலை அவை கூடியதும் இப்பிரச்சியை எழுப்பிய பிஜேபி உறுப்பினர்கள் தமது கருத்துக்காக திரு ராம்ஜிலால் சுமன் மன்னிப்பு கோர வேண்டுமென வலியுறுத்தினர்.

அப்போது பேசிய அவைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், தேசத்தலைவர்களை அவமதிக்கும் வகையில் கருத்து தெரிவிப்பதை தவிர்க்க வேண்டுமெனவும், இதுபோன்ற தலைவர்கள் குறித்து பேசும்போது உறுப்பினர்கள் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

மக்களின் உணர்வுகளை புண்படுத்தும் வகையில் கருத்து தெரிவிக்க வேண்டாம் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ பேசுகையில், உறுப்பினர்கள் அவைத்தலைவரின் வழிகாட்டுதலின்படி செயல்பட வேண்டுமெனவும், தேசத் தலைவர்களை அவமதிக்கும் செயலில் ஈடுபட வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டர்.

இதுபோன்று கருத்து தெரிவிப்பவர்களை காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கண்டிக்க வேண்டுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதையடுத்து பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்வே, நாட்டிற்காக பாடுபட்டவர்களை அனைவரும் மதிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

எனினும் அவை உறுப்பினருக்கு எதிராக சிலர் சட்டத்தை தங்களது கையில் எடுத்துக் கொள்வது சரியல்ல என்றும் திரு மல்லிகார்ஜுன கார்கே குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

கோவாவில் உள்ள அரசு கட்டிடங்கள் அனைத்துக்கும் ஒரே வர்ணம் பூசப்படும் என அம்மாநில முதலமைச்சர் திரு பிரமோத் சாவந்த் தெரிவித்துள்ளார்.

அரசு கட்டிடங்களின் தோற்றத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அம்மாநில சட்டப்பேரவையில் அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தில்லி முன்னாள் முதலமைச்சரும், ஆம் அத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளருமான திரு அரவிந்த் கெஜ்ரிவால் பொதுச் சொத்துக்களை தவறாக பயன்படுத்தியதாக தில்லி காவல்துறையினர் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

தில்லி ரோஸ் அவென்யூ நீதிமன்றத்தில் காவல்துறையினர் தாக்கல் செய்துள்ள நடவடிக்கை அறிக்கையில் திரு கெஜ்ரிவாலுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.,

இந்த வழக்கு அடுத்த மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் அமைதியை குலைப்பதற்கு சிலர் முயற்சிப்பதாகவும், அதற்கு எதிர்க்கட்சி துணைப்போவதாகவும் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி ஒரு பிரச்சினை குறித்து பேச முயன்றபோது பேரவைத் தலைவர் திரு அப்பாவு அதற்கு அனுமதி மறுத்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அஇஅதிமுக உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக எழுந்து நின்று குரல் எழுப்பியதை அடுத்து, அவர்களை அவையிலிருந்து வெளியேற்றுமாறு பேரவைத் தலைவர் உத்தரவிட்டார்.

இதையடுத்து அஇஅதிமுக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

பின்னர் பேசிய முதலமைச்சர், தமிழகத்தில் அமைதி நிலவுவதாகவும், சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏதும் இல்லாததால்தான் ஏராளமான தொழில்கள் வந்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

தமிழகம் முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருப்பதை தாங்கிக் கொள்ள முடியாத சில சக்திகள் மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி காவல் துறைக்கும், அரசுக்கும் களங்கம் ஏற்படுத்த மேற்கொள்ளும் முயற்சிக்கு எதிர்க்கட்சித் தலைவர் துணை போகக்கூடாது என்றும் திரு மு க ஸ்டாலின் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மத்திய தொழில் பாதுகாப்புப் படையின் 56-வது ஆண்டு தினத்தையொட்டி விழிப்புணர்வு சைக்கிள் பயணம் மேற்கொண்டுள்ள அந்த படையின் வீரர்கள் காரைக்கால் வந்தடைந்தனர்.

அவர்களுக்கு மாணவ மாணவியரும், பொதுமக்களும் சிறப்பான வரவேற்பு அளித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - செ ஜெ ) --- 43—செகண்ட்*

**[]<<<>>>[]**

பழங்களை பழுக்க வைப்பதற்கு மத்திய அரசின் உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய அமைப்பால் அனுமதிக்கப்பட்ட பொருட்களை மட்டுமே பயன்படுத்த வேண்டுமென உணவு பாதுகாப்புத்துறை அறிவுறுத்திள்ளது.

ஈரோட்டில் ரசாயன ஸ்ப்ரே-யை பயன்படுத்தி பழுக்க வைக்கப்பட்ட ஒரு டன் வாழைப்பழங்களை பறிமுதல் செய்த மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் திரு தங்க விக்னேஷ் அனுமியில்லாத ரசாயன பொருட்களை பயன்படுத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்தார்.

*( சவுண்ட்பைட் - தங்க விக்னேஷ் ----28 செகண்ட்*

**[]<<<>>>[]**

சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் தியா சிட்டேல் - மனுஷ் ஷா இணை அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 13-11, 11-13, 12-10, 11-5 என்ற செட் கணக்கில் இந்தியாவின் ஆகாஷ் பால் - **Poymantee baisya** இணையை வென்றது.

இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் மனவ் தாக்கர், சரத்கமல் ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**[]<<<>>>[]**

அகமதாபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரன்சிங் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 6-4, 6-4 என்ற செட் கணக்கில் ஜப்பானின் **Ryotaro taguchi**-யை வென்றார்.

இப்போட்டியில் ஆரியன்ஷா, கிரிஷ் தியாகி ஆகியோரும் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஆட்டத்தில் சென்னை அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**